www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

### 12

### சிங்கை நகர்

உக்கிரசிங்கன் புதியதலைநகர் ஒன்றினைத் தன் இராச்சியத்தில் உருவாக்க விரும்பி வன்னிப்பிரதேசத்தில் திக் விஜயம் ஒன்றினை மேற்கொண்டான். அவன் வன்னி மார்க்கமாகச் செல்லுகையில் வன்னியர்கள் ஏழு பேரும் எதிர்கொண்டு வந்து

சிங்கபுரமாகும். இம்மன்னன் ஈழத்தைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்தான். உத்தரதேசத்திலும் இவனது ஆட்சி நிலவியது. அத்தலைநகரின் பெயர் இங்கு வழங்கலாயிற்று எனப் புஸ்பரத்தினம் கருதுகிறார். ஆனால் சிங்கை நகர் என்ற பெயர், முதன் முதல் கதிரமலையிலிருந்து தலைநகரை வேறிடத்திற்கு மாற்றிப் புதிய தலைநகர் ஒன்றினை உருவாக்கிய உக்கிரசிங்கனின் பெயரைத் தாங்கி சிங்க (ன்) நகர் என விளங்கியிருந்தது எனக் கொள்வதே சாலப் பொருத்தமானது. தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கை நகர் என்பது யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாக பூநகரியில்

பொருத்தமானது. ப. புஸ்பரட்ணத்தின் ஆய்வுகளில் இருந்து பூநகரிப் பிரதேசம் பண்டைய இராச்சியம் ஒன்றின் வளமான பிரதேசமாக விளங்கியிருக்கிறது எனத் தெரிகிறது. பூநகரிப் பிரதேசத்தில் கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் இதனை நிரூபிக்கின்றன. சிங்கள நூல்களிலிருந்தும் கம்பளைக் கல்வெட்டிலிருந்தும் சிங்கை நகர் அலையெறியும் கடற்கரையோரத்தில் அமைந்திருந்தது எனத் தெரிகிறது. 'பொங்கொலி நீர்ச்சிங்கை நகராரியன்' என கோட்டைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியது. சுண்டிக்குள மணல்தடை, ஆனையிறவு மணல் அணை,

பயன்பாட்டை உணராத எமது மூதாதையரான பண்டைய தமிழ் மக்கட் கூட்டத்தினர் தமக்குப் பரிச்சயமான தரைமேல் வடிகாலமைப்பைக் கொண்ட நதிகள் பாய்கின்ற வன்னிப்பிரதேசத்தை ஆரம்பத்தில் தமது வதிவிடங்களாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ளலாம். பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களின் தரையமைப்பும் வடிகாலமைப்பும் நீர்ப்பாசனக்குளங்களை நிறுவிப் பயிர்ச்செய்கை பண்ணச் சாதகமான நிலமை அவர்களால் ஆரம்பத்தில் விரும்பப்பட்டிருகிக்கிறது. தரைமேல் வடிகாலற்ற

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பிரதேசமானது மணல்கிராமமாகவும் (வலிகாமம்) மணற்றியாகவும் (வடமராட்சி) எமது பண்டைய மக்களால் கருதப்பட்டு விரும்பிக் குடியேற்றப்படாது இருந்தது. எனவே தமிழரது பண்டைய குடியிருப்புக்கள் யாழ்ப்பாணக்குடாநாடு தவிர்ந்த பெருநில்ப்பரப்புக்களில்


ஒரு மணல்வெளியே தமிழ் மன்னன் ஒருவன் பரிசளித்ததாகக் கூறும் இச்சம்பவத்தின் உண்மை பொய் எவ்வளவு என்பதை ஆராய்வதை விடுத்து மணல் வெளியாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் வடக்கேயிருந்தது என்றால் அதைப் பரிசாகத் தந்த மன்னன் இருந்தவிடம் தென் நிலப்பரப்பாக இருந்தது என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதே.

### பாண்டியர் படையெடுப்பு

தென்னிந்தியாவில் தமிழரசுகள் வலிமை பெற்றிருந்த காலவேளைகளில் கடல் கடந்து இலங்கை மீது படையெடுப்புக்கள் மீண்டுந் தொடங்கின. சிங்கை நகரிலிருந்து ஜெயதுங்கன் வடவிலங்கையை ஆண்ட காலத்தில், முதலாம் சேனன் என்பான் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்தான். ஸ்ரீமாற வல்லபன் (கி.பி. 815 - 862) என்ற பாண்டிய மன்னன் இலங்கைக்கு படையெடுத்து வந்து ஜெயதுங்கனை வென்றதோடு சேனனையும் புறமுதுகிடச் செய்து திறை பெற்றுச் சென்றான். ஜெயதுங்கனின் பின்னர் உத்தரதேசத்தை அவன் சந்ததியினரே ஆண்டிருக்கவேண்டும். அவர்கள் தென்னிந்தியத் தமிழரசர்களுக்கு அல்லது தென்னிலங்கைச் சிங்களவரசர்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்திருக்க வேண்டும் எனத் துணியலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் உத்தரதேசம், 2ம் கஸ்ஸப மன்னனின் ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டிருந்தது என்பதை கந்தரோடைக் கல்வெட்டிலிருந்து அறியலாம் என கா. இந்திரபாலா குறிப்பிடுகிறார். மேலும்

வன்னிநாடுகளைத் திறைகொடுத்து ஆளாக்க உத்தரவு கேட்டார்கள். உக்கிரசிங்கன் அதற்குச் சம்மதித்தான். அப்பிரதேசத்தில் அவன் உருவாக்கிக்கொண்ட தலைநகர் சிங்கைநகராகும். வடவிலங்கை இரர்ச்சியத்தின் தலைநகரின் பெயர் சிங்கை அல்லது சிங்கைநகர் எனச் செகராசசேகரமாலை, செகராசசேகரம், தஷிணகைலாசமாலை ஆகிய நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியச் சக்கரவர்த்தி ஒருவனைக் குறிப்பிடுகின்ற கல்வெட்டாக இலங்கையிலே கிடைத்துள்ள ஒரே ஒரு கொட்டகம கல்வெட்டிலும் சிங்கை நகரே ஆரியச் சக்கரவர்த்தியின் அரசிருக்கையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் வருவதற்கான காரணத்தை ஆராய்வது பொருத்தமானது. சிங்கை நகர் (சமஸ்கிருதம் - ஸிங்கஹ நகர) என்ற பெயர் கலிங்க நாட்டு நகரங்களுள் ஒன்றாகிய ஸிங்ஹபுரத்தின் தொடர்புடைய பெயர் என்று கொள்ள இடமுண்டு. கலிங்க நாட்டு வம்சங்களுள் ஒன்று கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையாவது ஸிங்கபுர என்ற தலைநகரிலிருந்து ஆட்சி நடத்தியது என அறிகிறோம் என இந்திரபாலா குறிப்பிடுகிறார். சோழன் முதலாம் பராந்தகனின் தலைநகர்களில் ஒன்று

இருந்ததெனக் கூறமுடியும். வல்லிபுரப் பகுதியிலேயே சிங்கை




நகர் இருந்ததெனவும் நல்லூருக்கு அருகில் இருந்ததெனவும் வரலாற்றாசிரியர்கள் கொள்வது ஏற்றதாகவில்லை. சிங்கை நகரை உக்கிரசிங்கன் பகுதியிலே நிறுவினான் என்பது

பண்ணைப் பாலம், பொன்னாலைப் பாலம்

எதுவுமின்றி இந்து சமுத்திரத்தின் கிழக்கு - மேற்கு இணைப்பு, இக்கடனீரேரியைப் பொங்கு கடலாக வைத்திருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின்

கூடுதலாக அமைந்திருந்தன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சிங்கை நகரிலிருந்து அவனரசு செய்யுங்காலத்தில் நரசிங்கன் என்னும் ஓர் ஆண்மகனும் செண்பகவதி என்னும் ஒரு பெண்மகவும் பிறந்தார்கள். உக்கிரசிங்கனின் பின் நரசிங்கன், ஜெயதுங்க பரராசசிங்கன் என்னும்

**-செங்கை ஆழியான்-**

நாமத்துடன் அரசனானான். அவன் அரசியற்றும் நாளிலே யாழ்ப்பாடி என்றும் பாணகுலத்தவனொருவன் பரிசில் பெறுவான் வேண்டி அரசவைக்கு வந்து தனது திறமையைக் காட்டினான். அரசன் மகிழ்ந்து இப்போது கரையூர், பாசையூர் என்றழைக்கப்படுவதாகிய மணல் மேட்டைப் பரிசிலாகக் கொடுத்தான். யாழ்பாடியும் உவகையுடன் ஏற்று தன்னூர் சென்று தன்குலத்தவருடன் வந்து அவ்விடத்தைத் திருத்தி குடியேறினான். அவ்விடம் யாழ்ப்பாணம் என்றழைக்கப்பட்டது. அப்பெயர் பின் பறங்கிக்காரர் கட்டிய நகரிக்காகி ஈற்றில் குடாநாடு முழுவதற்குமுரியதாகிவி விட்டது. கண்தெரியாத ஒரு யாழ்ப்பாடிக்கு இசைக்கு பரிசாகத் தனது இராச்சியத்திற்கு வடக்கே இருந்து

பத்தாம் நூற்றாண்டில் உத்தரதேசம் 4ம் மஹிந்த என்ற சிங்கள மன்னனின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து ஒரு படையெடுப்பு யாழ்ப்பாணத்திலே நடைபெற்றபோது, அப்பொழுது அனுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்த நான்காம் மஹிந்த மன்னன் (956 - 972) உடனே யாழ்ப்பாணத்துக்கு படையனுப்பி அப்பகுதியை மீண்டும் விடுவித்தான் என சூளவம்சம் கூறும். படையெடுப்பு நடாத்திய தென்னிந்திய மன்னன் சுந்தரசோழன் எனப்படும் 2ம் பராந்தகனாவான். பின்னர் மீண்டும் கி.பி. 1003 இல் ராஜராஜசோழன் இலங்கை மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.

(தொடரும்)

லா சப்பலில் அர்ச்சனாவின்
GANDHI TIFFIN STALL
Restaurant
22 rue Cail, 75010 Paris. Mo: La Chapelle/ Gare du Nord
Tel: 01 40 05 09 00 / 01 39 86 61 85

காலை 9.30 மணி முதல் இரவு 11.30 மணி வரை காலை - மதிய - இரவு நேர
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவு வகைகளை
அறுசுவையுடனும் மகிழ்வுடனும் உண்ண அன்போடு அழைக்கின்றது
GANDHI TIFFIN STALL
அர்ச்சனா கலையரங்கத்தின் விசேட சேவையாக
உங்கள் விருப்பத்திற்கு அமைய மண்டப ஒழுங்குகள், மணவறை - அலங்காரங்கள், சுவையுள்ள சைவ - அசைவ உணவு வகைகள், கேக் வகைகள், வீடியோ, நிழற்படம், வாகன வசதி போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும் நாடுங்கள்!

படிப்பகம்